


# உலக உணவு தின சுவரொட்டி போட்டி

உலக உணவு தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு சர்வதேச தினமாகும். உணவு விநியோகச்சங்கிலி மூலமாக நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் பகிர்ந்து கொள்ள உலக உணவு தினம் ஒரு நல்ல தளமாகும்.

MA's Kitchen ஆனது சமூகங்களுக்கு பாதுகாப்பான மற்றும் அதிக உணவை வழங்குவதில் நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படுத்தவும் விநியோகச்சங்கிலியில் முக்கியமான நபர்களை அங்கீகரிப்பதற்காகவும் சுவரொட்டி போட்டியை நடாத்துகிறது.

பங்குபற்றுபவர்கள் தங்கள் சுவரொட்டி வரைவதற்கான கருப்பொருளினை கீழே உள்ள தலைப்பு **A** அல்லது தலைப்பு **B** ஆகியவற்றிலிருந்து ஒன்றை தேர்ந்தெடுக்கலாம்.

### A. உணவு கதாநாயகர்கள்

அன்றாட வாழ்க்கையில் உணவு இன்றியமையாத ஒன்றாகும். உணவு உற்பத்தியில் ஈடுபடும் அனைவரும் உணவின் கதாநாயகர்கள். உமது சுவரொட்டியில் உணவு உற்பத்தியாளர்கள் உணவின் கதாநாயகர்களாக வர்ணிக்கப்படவேண்டும்.

### B. உணவின் நிலைத்த தன்மை

நாட்டின் தற்போதைய நிலையில் உணவின் விலைவாசி மற்றும் உணவின் தேவையானது அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இதற்கு ஈடுசெய்யும் வகையில் நிலையான மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் உணவு சார்ந்த துறையில் உள்ளடங்கியதாக உமது சுவரொட்டி அமைய வேண்டும்.

**ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.15000க்கான புத்தக சந்தா வழங்கப்படும்.**

### வயது வகைகள்

| பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 |
|---|---|---|
| தரம் 1 முதல் 5 வரை | தரம் 6 முதல் 10 வரை | தரம் 11 முதல் 13 வரை |

### குறிப்புகள்

உள்ளடக்கத்தின் உண்மைத் தன்மை மற்றும் கலைத்தகுதி இரண்டின் அடிப்படையில் நீதிபதியால் தீர்மானிக்கப்படும்.

### முடிவுத்திகதி

அக்டோபர் 12, 2022

நோர்த் லங்கா பமிலி பூட்ஸ் நிறுவனத்தில் பரிசு வழங்கல் நிகழ்வானது 16 அக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**North Lanka Family Foods (Pvt) Ltd,**
Iyakkachchi Junction, Palai, Kilinochchi.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள கீழே உள்ள இலக்கத்திற்கு அழைக்கவும்.

TP :- 0213900900

அல்லது North lanka family foods Outlet Store இலிருந்து பெற்றுக்கொள்ளவும்.